**மாத்தளை மாநகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

மாத்தளை மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாத்தளை மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் பாதகமான அபிப்பிராயமொன்ற வழங்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் 1.6.1 (ஓ) ஔ மற்றும் க பந்தியின் அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீனாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பண பொறுப்பாளர் பொறுப்பில் கையிலிருந்த ரூபா 526,148 ஆன காசு ஐந்தொகை யில் நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை | இத்தவறினை எதிர்காலத்தில் வங்கி இணக்ககூற்றை தயாரிக்கும் போ்த சீராக்குவதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வு ஆண்டின் இறுதி திகதியில் பெற வேண்டிய பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி மொத்தம் ரூபா 2,760,820 ஆன கடன் கொடுத்தோரிடமிருந்து கழித்து காண பிக்கப்பட்டுள்ளமையால் கடன் கொடுத்தோர் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது | இப்பெறுமதியை எதிர்காலத்தில் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்படுவாக | |
| (இ) | 2019 ஆம் ஆண்டிற்காக பெறவேண்டிய வாடி வீட்டு வாடகை ரூபா 1,334,567 கூடுதலாக கணக்கிட்டு செய்யப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக பெறவேண்டிய வாடி வீட்டு வாடகை ரூபா 155,700 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி திகதியில் பெறவேண்டிய வாடி வீட்டு வாடகை மற்றும் திரண்ட நிதியம் ரூபா 1,178,867 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது | 2022 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்வதாக | |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | முன்னைய ஆண்டிற்காக பெற வேண்டிய ரூபா 5,547,205 ஆன முத்திரை கட்டணங்கள் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | காணி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து கிடைத்திருந்த அட்டவணைகளின் பிரகாரம் நடப்பாண்டின் பட்டியலாக கணக்கீடு செய்யப்பட்டதாக | |
| (உ) | பெறுமதி சேர் வரி கணக்கில் முன்னைய ஆண்டுகளில் தவறுகளை சீராக்குவதற்காக 92 ஆம் இலக்க நாட்குறிப்பின் பிரகாரம் ரூபா 168,308 பெறுமதிசேர் அடிப்படையான வரி (வெட்) வரிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் திரண்ட நிதிய கணக்கு வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை இவ்வாறு கணக்கு வைத்தமையால் கணக்கு சமப்படுத்தும் முறை கணக்காய்வு தெளிவுபடுத்தப்படவில்லை | பெறுமதி சேர் அடிப்படையான வரிக் கணக்கின் மீதி மற்றும் திரண்ட நிதியத்திற்கு இடையே வேறுபாடுகள் எதிர்காலத்தில் சீராக்கி கணக்கீடு செய்வதாக | |
| (ஊ) | சபைக்குரிய விஹாரவத்த காணியில் கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதற்குரிய செயற் திட்டத்திற்காக சாத்தியவள ஆய்விற்காக மீளாய்வாணடின் போது பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு ரூபா 400,000 கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்ததுடன் செயற்திட்டம் செயல்படுத்தப்படாமல் இருந்தமையால் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதும் அவ்வாறு செய்யாமல் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2022 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (எ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களுக்கு சலுகை அடிப்படையில் பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,134,000 பெறுமதியான 300 கழிவுப்பொருள் சேகரிப்பு கூடைகள் கையிருப்பாக பதிவு செய்யப்படாமல் தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2022 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | |
| (ஏ) | நகர முதல்வர் உத்தியோகபூர்வ வீடு, வாகன தொகுதியின் மேல்மாடி, தீயணைப்புப் பிரிவு மற்றும் சாரதி மற்றும் மின்சாரத் பிரிவின் அறையை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்த ரூபா 48,510,286 மற்றும் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 7,532,630 பெறுமதியான நிலையான 25 சொத்து விடயங்கள் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை | 2022 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | |
| (ஐ) | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்ட மாநகர சபைக்கு மீளாய்வாண்டின் கையளிக்கப்பட்ட உள்ளக விளையாட்டு அரங்கின் மற்றும் நீச்சல் தடாகத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | நிலையான சொத்துக்களுக்காக மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொண்டு கணக்கிடு செய்யப்படுவதாக | |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | மாத்தளை நகரில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைக்கும் கட்டணங்கள் அறவிடுதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து மீளாயவாண்டின் திசெம்பர் மாதத்திற்காக பெறவேண்டிய வாகன நிறுத்தி வைத்தல் கட்டணங்கள் ரூபா 633,433 கணக்கிடு செய்யப்பட்டிருக்க வில்லை | 2022 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | |
| (ஓ) | முன்னைய ஆண்டின் ரூபா 19,123,258 ஆன வழங்குனர் கடன் கொடுத்தோர் கணக்கீடு செய்வதற்காக முன்னே ஆண்டில் 14 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் வழங்கள் கொள்வனவு கணக்கு வரவு வைக்கப்பட்டு வழங்கல கடன் கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் வழங்குனர் கணக்கு வரவு வைக்காத தவறினை மீளாய்வாண்டிலும் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை | பதில் அளிக்கப்பட்டிருக்கவி ல்லை. | |
| (ஔ) | முன்னைய ஆண்டில் வழங்குனர் கடன் கொடுத்தோரிடருந்து ரூபா 5,541,043 ஐ பதிவழிப்பதற்காக அவ்வாண்டில் 13 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் வழங்கள் கடன் கொடுத்தோர் வரவு வைக்கப்பட்டு களஞ்சிய கணக்கு செலவு வைக்கப்படாத தவறினை மீளாய்வாண்டிலும் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை | பதில் அளிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (க) | 2019 ஆம் ஆண்டின் ஒவ்வொரு மாதத்திலும் திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கவேண்டிய ரூபா 16,673,586 கூட்டுப்பெறுமதி அக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு மாதங்களில் அக் கணக்கிற்கு வரவு வேண்டிய பெறுமதி ரூபா 2,372,791 தொகை அக்கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.. அவ்வாறு தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த மீதிகளை சீராக்குவதற்காக முன்னைய ஆண்டில் 16 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் அப்பெறுமதி இரண்டு மடங்கால் முறையே ரூபா 33,347,172 மற்றும் ரூபா 4,745,582 தொகை திரண்ட நிதியக் கணக்கு வரவு வைக்கப்பட்டு அக்கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் அத்தவறு சீராக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அத்தவறு மீளாய்வாண்டிலும் சீராக்கப்பட்டு இருக்கவில்லை. | | |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 04 சொத்து விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அதற்குரிய அட்டவணைகளில் காண்பிக்கப்பட்ட மீதிகளுக்கு இடையே அட்டவணைகளின் பெறுமதி ரூபா 4,103,664 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | இணக்கமிண்மைகளுக்குரிய வித்தியாசம் இனங்காணப்பட்டு எதிர்காலத்தில் கணக்குகளை சீராக்குவதாக | கணக்குகளில் மீதிகள் மற்றும் அட்டவணைகளில் காணப்படும் மீதிகளில் இணக்கமின்மை இணங்காணப்பட்டு கணக்கு மீதிகள் சீராக்கப்பட் வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மொத்தம் ரூபா 89,585,589 ஆன 05 கணக்கு விடயங்களுக்குரிய் கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த விடயங்களுக்குரிய ஆவணங்கள் மற்றும் அட்டவணைகள் இனங்காணப்பட்டு எதிர்காலத்தில் சணக்குகள் சமர்ப்பிக்கப்படுவதாக | உரிய ஆவணங்கள் மற்றும் அட்டலணை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 2021 யூன் 16 ஆந் திகதிய MH/Add/Sec/Admin1/16/202 ஆம் இலக்க சுகாதார அமைச்சின் சுற்றறிக்கை | கொவிட்-19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக பங்களிக்கும் ஈடுபடும் சுகாதார சேவை மற்றும் சுகாதார பதவியணியினரின் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக ரூபா 7,500 மற்றும் விசேட மாதாந்த கொடுப்பனவு ஒன்று வழங்க முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதற்கு இணங்காத வகையில் பொதுச்சபையின் மாநகர சபையின் சுகாதார பிரிவிற்கு புறம்பான பிரிவுகளில் சேவையில் புரியும் 14 உத்தியோகஸ்தர்களுக்கும் 53 ஊழியர்களுக்கும் மீளாய்வாண்டின் யூன் மாதம் மதத்திற்காக ரூபா 7,500 வீதம் ரூபா 502,500 படிகள் வழங்கப்பட்டிருந்தன | விஷேட மாதாந்த படிகளை வழங்குவதற்கான இயலுமை தொடர்பில் பிரதான செயலாளரிடம் வினவியுள்ளதாகவும் பதிலொன்று கிடைக்காததால் ஊழியர்களின் வேண்டுகோளின் பேரில் பொதுச் சபை அங்கீகாரத்துடன் மிகை அறவீட்டிற்கு உட்பட்டு படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க சுகாதார பதவியணியினருக்காக மாத்திரம் படிகள் வழங்கப்பட வேண்டும் |
| (ஆ) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 ஆம் இலக்க | 2013 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் சிறப்புச் வியாபாரச் சந்தையின் அரசின் விலை 84 | கடைகளுக்காக மதிப்பீட்டுப் பெறும *[cut off]* திருத்தம் செய்வதற் *[cut off]* 2021 திசெம்பர் 2 *[cut off]* | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய காலப்பகுதியில் |

| | | | |
|---|---|---|---|
| உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 5(i) ஆம் பந்தி | கடைகளுக்கு வாடகை மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் குத்தகை உடன்படிக்கைளில் 4(iii) பந்தியின் பிரகாரம் குத்தகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆந் திகதிய மாகான பிரதான விலை மதிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அம்மதிப்பீட் அறிக்கை கிடைக்கவில்லையென | மதிப்பீட்டு அறிக்கையை பெற்று வாடகையை திருத்தம் செய்து உடன்படிக்கை புதுப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 74,897,187 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 59,242,057 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 9,157,277 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 35,528,800 ஆக இருந்தது. | அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடுவதற்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணத்தையும் முத்திரைக் கட்டணங்களையும் அறவிடப்படல் வேண்டும். |

#### 2.2.2 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 536,781 தொகை அறவிட வேண்டியிருந்தது. | மிகை அறவீட்டை மேற்கொள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சிடமிம் ஆலோசணை கோரப்பட்ட போதும் இதுவரை ஆலோசணை கிடைக்கவில்லையென | மிகை அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 24 ஆந் திகதிய 2018/05 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் முக்கியமான பிரதான செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் மாத்தளை மாநகரசபையின் பிரச்சார நடவடிக்கைகளுக் காக 06 காலத்திற்காக ரூபா 1600 வீதம் நாளாந்த படியாக முறையற்ற வகையில் நபரொருவர் ஆட்சேரப்பு செய்யப்பட்டு மீளாய்வாண்டில் ஆகஸ்ட் 23 முதல் திசெம்பர் 31 வரை யான காலப்பகுதிக்கு ரூபா 115,200 பணிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தனர் | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் மத்திய மாகான பிரதான செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது இருந்ததுடன் இவ்வாறான அவசர ஆட்சேர்ப்பிற்காக எதிர் காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதாக | முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்ய நவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய 11 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 120,420,979 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அதில் அறவிடப்படாமல் இருக்கும் காலம் 1 ஆண்டிற்கு குறைந்த மீதி ரூபா 68,587,536 ஆகவும் 1 ஆண்டிற்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்கு குறைந்த மீதி ரூபா 33,790,168 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 18,043,276 என உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | பெற வேண்டிய பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 127,936,704 தொகை தீர்வு செய்யப்படாதிருந்ததுடன் அதில் தீர்வு செய்யாமல் இருக்கும் காலம் 1 ஆண்டிற்கு குறைந்த மீதி ரூபா 24,277,933 ஆகவும் 1 ஆண்டிற்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்கு குறைந்த மீதி ரூபா 32,453,572 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 71,205,199 தொகை என உள்ளடக்கப்பட்டிருந்தது. | நீண்டகாலமாக உள்ள மீதிகளை எதிர்காலத்தில் சீராக்குவதாக | செலுத்த வேண்டிய கடன் மீதிகளை தீர்வு செய்ய வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1952 இன் 6 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற (நிறைவேற்றப பட்ட உப உறுப்புரை) சட்டத்தின் (மாநகர சபைகள்) xxii ஆம் பகுதியின் 1(2) பிரிவின் ஏற்பாடுகள் மற்றும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 229(ஆ) பிரிவின் ஏற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் சிறப்பு வியாபார கடைத்தொகுதி மற்றும் கொங்காவலை பொது வியாபார கடைத்தொகுதியின் 32 மற்றும் 3 A ஆம் இலக்க இறைச்சிக் கடை கேள்வி நடைமுறை பின்பற்றப்படாமல் முன்னைய ஆண்டின் வருடாந்த வாடகைக்கு 10 சதவீதம் சேர்க்கப்பட்டு முறையே ரூபா 1,991,194 மற்றும் ரூபா 1,989,874 தொகைக்கு வியாபாரத்தை மேற்கொள்வதற்கு குத்தகையாளருக்கு மீளாய்வாண்டின் சனவரி 01 ஆந் திகதி முதல் நவம்பர் 01 ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்வது தாமதம் காரணமாக வருடாந்த வாடகைக்கு 10 சதவீதம் சேர்க்கப்பட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தினதும் நிறைவேற்றப்பட்ட உப உறுப்பபுரையில் குறிப்பிடப்பட்ட கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்பட்டு இறைச்சிக் கடைகளை வாடகைக்கு வழங்க வேண்டும். |
| (ஆ) | 12774 சதுர அடி அளவிலான மாத்தளை நகரின் சிறப்பு வியாபார கடைத்தொகுதியின் இரண்டாம் மாடியை குத்தகைக்கு வழங்குவதற்காக 2014 ஆம் ஆண்டிலும் 2015 ஆம் ஆண்டின் போதும் கோரி 18 கேள்விதாரர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட மீளச் செலுத்தக்கூடிய வைப்புக்கள ரூபா 180,000 தொகையம் 07 பேரிடமிருந்து பெற்றுக்கொண்ட 03 மாத குத்தகைக்கு வாடகைக்கு சமமான ரூபா 241,068 ஆன வைப்புக்களும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த போதும் அதனை செயற்படுத்தாமல் சிறப்பு வியாபாரச் சந்தை தொகுதியின் இரண்டாம் மாடி விளைவற்று காணப்பட்டது | கேள்வி கோரி தகைமையுள்ள கேள்விதாரர்கள் தெரிவு செய்யப்பட்டு கடைகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஒரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு இரண்டாம் மாடியின் கடைகள் நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும் |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தளை நகரின் சிறப்பு வியாபார கடைத்தொகுதியின் மூன்றாம் மாடியில் 1000 சதுர அடி அளவில் ரூபா 40,500 ஆன மாதாந்த வாடகையில் தனியார் உதவி வகுப்பொன்றை நடாத்திச் செல்வதற்கு தனியார் நிறுவன மொன்றுக்கு முறையான ஒப்பந்தமொன்று இல்லாமல் 2016 மே மாதம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2016 மே மாதம் முதல் திசெம்பர் வரை 1250 சதுர அடியும் 2017 சனவரி முதல் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை 5000 சதுர அடி பயன்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறு மேலதிகமாக பயன்படுத்தியிருந்த இடத்திற்காக 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை வாடகையாக ரூபா 9,801,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 1000 சதுர அடிகளைப் பயன்படுத்தியமைக்காக 2017 மற்றும் 2020 மற்றும் மீளாய்வாண்டிற்காக மொத்தம் ரூபா 786,119 ஆன நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை செய்யப்பட்ட சதுர அளவிற்கு புறம்பாக பயன்படுத்தி சதுர அடி அளவில் உள்ள பொருட்களை அகற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக | பயன்படுத்தப்பட்ட சதுர அடி அளவிற்கு ஏற்ப வாடகை அறவிடப்பட வேண்டியதுடன் முறையான உடன்படிக்கைகளை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

### 3.5 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மொத்தம் ரூபா 4,970,000 ஆன 06 வாகனங்கள், வீதி பதப்படுத்தும் இயந்திரமொன்று, காணியொன்ற பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 02 வாகனங்கள் மற்றும் கட்டிடமொன்று 1 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான காலவீச்சில் விளைவற்றுக் காணப்பட்டன. | திருத்தம் செய்யக்கூடிய சொத்துக்களைத் திருத்தம் செய்தற்கும் அவ்வாறு முடியாத சொத்துக்களை கைதவிர்ப்பதற்கும் பொருத்தமான நடைமுறைகளை எடுப்பதாக. | காணி மற்றும் கட்டிடங்களைப் பயன்படுத்துவதற்கும் திருத்தம் செய்யக்கூடிய சொத்துக்களைத் திருத்தம் செய்வதற்கும் ஏனைய சொத்துக்களை கைதவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 திண்மகக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை நாளாந்தம் 16.5 தொன் கழிவுகளை சேகரிப்பதுடன் அது உக்கும் மற்றும் உக்காத வகையில் வேறாக்கப்படாத 1 ½ தொன் அளவிலான கழிவுகளை நாளாந்தம் வாரிய பொலவத்த கழிவுத்தொகுதிக்கு முறையற்ற வகையில் வெளியேற்றியிருந்தது அவ்வாறு வாரிய பொலவத்த கழிவு பொருட்கள் பூமியில் சேரும் கழிவு நீர் மழை காலங்களில் இயற்கை | சுற்றாடல் அதிகார சபையால் இவ்வழக்கின் செவயற்பாடுகளை மேற்கொள்வதுடன் கழிவுகளை வெளியேற்றுவதற்கு வேறு இடமொன்றை பெற்றுக்கொள்வதற்கு | நீதிமன்றத்தின் பரிந்துரைகள் மற்றும் சுற்றாடல் அதிகாரசபையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சுற்றாடலுக்கு சேதமொன்ற |

| | | |
|---|---|---|
| நீர் நிலைகளுக்கு சேர்வது அவதானிக்கப்பட்டது. வாரியபொலவத்த கழிவு வெளியேற்றும் காணி தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் காணப்படும் வழக்கின் பிரகாரம் முன்னைய ஆண்டின் பெப்ரவரி 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இடம்பெற்ற வழக்கு தவணைகளில் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கிவல்லை. இதன் காரணமாக சுற்றாடல் அதிகாரசபையால் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டிருக்கவில்லை.அத்துடன் நீதிமன்றத்தில் இருக்கம் வழக்கும் நிறைவடையவில்லை. அதற்காக 2018 செப்தம்பர் 15 ஆந் திகதி முதல் மீளதாய்வாண்டின் ஏப்ரல் 06 ஆந் திகதி வரையான காலவீச்சில் மொத்தம் ரூபா 5,639,975 ஆன வழக்கு கட்டணங்கள் கொடுப்பனவு செய்ய நேர்ந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. உரிய முகாமைத்துவமொன்றை செயற்படுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | ஏற்படாத வகையில் கழிவுப்பொருள் முகாமைத்துவம் பேணப்பட வேண்டும். |

### 3.7 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளுராட்சிமன்ற (நிறைவேற்றப் பட்ட உப உறுப்புரை) சட்டத்தின் v ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்ட கேள்வி நடைமுறை பின்பற்றப்படாமல் நலன்புரி சங்கங்களின் வேண்கோளின்றி 13 நகர அதிகாரப் பிரதேசங்களின் நலன்புரி சங்கங்களுக்காக பகிர்ந்தளிப்பதற்கு ரூபா 648,700 ஆன கென்வஸ் துணியிலான 13 மேவுகை (hut) மீளாய்வாண்டின் திசெம்பர் 10 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | ஆளுனிரின் கரங்களால் பகிந்தளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதால் விரைவில் கொள்வனவு செய்ய நேர்ந்தது. | தேவைப்பாடு இனங்காணப்பட்டு அத்தேவைப்பாடுகள் முன்னுரிமை அளித்து உரிய கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்பட்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும் |

### 3.8. ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| போக கொட்டுவ BK- 09 மின் கம்பத்தின் அருகில் உள்ள குறுக்கு வீதி கொங்கிரீட் இட்டு அபிவிருத்தி செய்தல் - ரூபா 902,769 | | |
| போக கொட்டுவ BK- 09 மின் கம்பத்தின் அருகில் உள்ள குறுக்கு வீதி கொங்கிரீட் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக ஒப்பந்த சங்கம் ஒன்றுக்கு ரூபா 902,769 இற்கு உடன்படிக்கை செய்து நிர்மாணம் | செயற்திட்டத்திற்கு பொது மக்கள் எதிர்ப்பின் காரணமாக தற்காலிகமாக வேலை இடைநிறுத்தப்பட்டு புலனாய்வு | தேவைகளை இனங்கண்டு, சாத்திய வள ஆய்வினை சரியாக மேற்கொண்டுஅதிக ளவில் நலன்கள் |

| | | |
|---|---|---|
| கையளிக்கப்பட்டிருந்தது. பிரதான கால்வாய் ஒன்றை மரித்து விவசாய நடவடிக்கைகளுக்காக நீர் சேகரித்து விவசாய நிலங்களுக்கு நீரை பகிர்ந்து அளிப்பதற்கு நிர்மாணிக்கப்பட்டு இருந்த பழைய அணைக்கட்டினால் மேவுகை செய்யப்படும் நீர் சேரும் பிரதேசம் மற்றும் அந்த அணைக்கட்டு வரை நீர் பயணிக்கும் பிரதான கால்வாயின் ஒரு பகுதி குருணிக்கற்கள் இட்டு அதன் மீது கொங்கிரீட் பரப்பி உறுப்பினர் ஒருவரின் வீட்டுக்க செல்வதற்காக மேற்படி வீதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது எவ்வாறு ஆயினும் இதுவரை குறித்த கொடுப்பனவு செய்யப்பட்டு இருக்கவில்லை | நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வும் இதுதொடர்பாக கணக்காய்வு விசாரணை கிடைத்துள்ளதாகவும் புலனாய்வு நடவடிக்கைகள் முடிவடையாமையால் எவ்வித கொடுப்பனவொன்றும் மேற்கொள்ளப்படவில்லை யென | கிடைக்கும் வகையில் முன்னுரிமை படுத்தப்பட்ட சுற்றாடல் சேதம் அற்ற செயற்திட்டங்களை செயற்படுத்துதல் வேண்டும். |

### 3.9 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 18 உத்தியோகத்தர்களிடமிருந்து இடர்கடன், விழாக் கடன் மற்றும் விசேட முற்பணம் என்பவற்றின் கூட்டுத்தொகை ரூபா 2,182,686 ஆக அறவிடப்பட்டிருக்கவில்லை. | மாகாணத் திறைசேரி ஊடாக தீர்வு செய்யப்பட்டுள்ள மீதிகள் புத்தகங்களுக்கு் உள்ளடக்கப்படாததை ஏற்றுக் கொள்வதுடன் ஏனைய கடன் மீதிகளை எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிட ம் இருந்து கடன் மீதிக் அறவிடப்பட வேண்டும் |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 பதில் அளிக்கப்படாத கணக்காய்வு விசாரணை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வர்டில் மாநகர சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 3 மாதங்களை மிகைத்த 10 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளிக்கப்படாமல் இருந்ததுடன் அவ்விசாரணைகளுக்கு உட்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் கணக்கிடக்கூடிய பெறுமதி ரூபா 31,955,993 ஆக இருந்தது. | பதில் அளிக்கப்படாத கணக்காய்வு விசாரணைகளுக்கு எதிர்காலத்தில் பதில் சமர்ப்பிப்பதாக | அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில் அளிக்கப்பட வேண்டும். |

**4.2 சுற்றாடல் சேதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சிறப்பு வியாபாரக் கடை தொகுதியின் கீழ் மாடியில் 9 மீன் கடைகளும் 03 இறைச்சிக் கடைகளிலிருந்து கழிவுநீர் மற்றும் கழிவு பொருட்கள் நகரின் பொது வடிகால் முறைமைக்கு விடுவிக்கப்பட்டு இருந்தது | கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக 04 கலி குழிகள் இருந்த போதும் அதற்கு கடை உரிமையாளர்கள் கழிவுப்பொருட்களை விடுவிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் இதற்குரிய திட்டமொன்று தயாரிப்பதாக | கழிவுநீர் பொது வாடிகனுக்கு விடுவிக்கப்படாமல் கழிவு நீரை விடுவிப்பதற்காக கலி குழிகள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும். |